பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 01 2025 **FRIDAY** 7 15 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- விசாகப்பட்டினம் எஃகு ஆலை மேம்பாட்டுப் பணிகள் சுயசார்பு இந்தியாவிற்கு வலுசேர்க்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- நாட்டின் தற்காப்பு திறனை மேம்படுத்துவது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

- அமெரிக்காவுடனான நட்புறவு சிறப்பாக உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

- தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

- ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திரு. இம்ரான்கானுக்கு 14 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் எஃகு ஆலை மேம்பாட்டுப் பணிகள் சுயசார்பு இந்தியாவிற்கு வலு சேர்க்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஆலையின் பங்கு மூலதனமாக சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முடிவெடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதில் எஃகு துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், இந்த ஆலை ஆந்திர மக்களின் இதயத்திலும், மனதிலும் சிறப்பிடம் பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் தற்காப்பு திறனை மேம்படுத்துவது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டை கடற்படை சிவிலியன்கள் ஆண்டாக அறிவித்ததை அடுத்து, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பாதுகாப்பு சூழல் மற்றும் உலக அளவில் அதிகரித்து வரும் பதற்றத்தை எதிர்கொள்ள நமது படைகளை வலுப்படுத்துவது அவசியம் என்று கூறினார்.

நாட்டின் கடல் எல்லையை பாதுகாப்பதிலும், பாதுகாப்பான கடல்பயணத்தை உறுதி செய்வதிலும் கடற்படை பெரும் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய கடல் வழித்தடங்கள் எப்போதும் பாதுகாப்பாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, கடல்சார் பாதுகாப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டது என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தலைமையிலான குழுவினரும், மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த் மோகன் உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

இந்தியா – அமெரிக்கா இடையிலான நட்புறவு, இருநாட்டு மக்களிடையேயான வலுவான உறவின் அடிப்படையில் அமைந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

பெங்களூருவில் இன்று அமெரிக்க துணைத் தூதரக திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், பாதுகாப்பு, தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கல்வித்துறையில் இருநாடுகளிடையேயான ஒத்துழைப்பு சிறப்பாக உள்ளது என்றார்.

பெங்களூருவில் அமெரிக்க துணைத் தூதரகம் திறக்கப்பட்டிருப்பது இத்தகைய ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அறிவாற்றல் பகிர்வுக்கும் இந்த தூதரகம் உதவிகரமாக இருக்கும் என்று திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பம் மாவட்டத்தில் செயல்படும் பி.எம்.ஸ்ரீ பள்ளி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தை, தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு.எல்.முருகன் இன்று பார்வையிட்டார்.

பின்தங்கிய மாவட்டத்திற்கான சிறப்பு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நேற்றும் இன்றும் ஆய்வு மேற்கொண்ட அவர், சாய்பாசா பகுதியில் உள்ள பி.எம்.ஸ்ரீ பள்ளியைப் பார்வையிட்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உற்சாகம், அர்ப்பணிப்பைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பள்ளியின் கட்டமைப்பு மற்றும் பிற வசதிகள், மாணவர்கள் கற்பதற்கு உகந்த சூழலை வழங்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, இம்மாவட்டத்தின் ஜெகந்நாத்பூரில் டாடா ஸ்டீல் அறக்கட்டளை சார்பில் நடத்தப்படும் தொழிற் பயிற்சி மையத்தையும் திரு.எல். முருகன் பார்வையிட்டார்.

இந்த தொழிற்பயிற்சி மையம், அப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மக்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து, அவர்களுக்கு அதிகாரமளிப்பதில், முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், வரும் 29ஆம் தேதி மௌனி அமாவாசை தினத்தன்று சுமார் 8 கோடிக்கும் மேற்பட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடவுள்ளதால், அங்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ஏற்பாடுகளை அம்மாநில தலைமைச் செயலாளர் திரு. மனோஜ்குமார் சிங், காவல்துறை தலைவர் திரு. பிரசாந்த் குமார் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

மேலும், அங்குள்ள ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தையும் அவர்கள் பார்வையிட்டு, பாதுகாப்பு நிலவரம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றி வந்த 96 இந்தியர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யா – யுக்ரைன் போரில் ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றிய 12 இந்தியர்கள் உயிரிழந்திருப்பதாக கூறினார்.

இவர்களில் கேரளாவைச் சேர்ந்த பினில் பாபு-வின் உயிரிழப்பு துரதிருஷ்டவசமானது என்று குறிப்பிட்ட அவர், பினில் பாபு-வின் குடும்பத்திற்கு வெளியுறவுத்துறை சார்பில் இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

காயமடைந்த மற்றொரு இந்திய வீரர் மாஸ்கோவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இன்னும் 16 பேரை காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷ் நிலவரம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், அந்நாட்டுடன் நட்பு ரீதியிலான உறவை தொடரவே இந்தியா விரும்புவதாக கூறினார்.

அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவில், இந்தியாவின் சார்பில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கலந்து கொள்ளவிருப்பதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

இதனைத் தொடர்ந்து, நாளை வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறவுள்ளது.

வேட்பு மனுக்களை திரும்பப் பெற திங்கட்கிழமை கடைசி நாளாகும். அன்றைய தினமே வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியிடப்படும்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு, அடுத்த மாதம் 5-ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை 8ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழுவினர் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டப் பணிகளை இன்று ஆய்வு செய்தனர்.

குழுவின் தலைவர் திரு. Saptagiri Sankar Ulaka தலைமையிலான இக்குழுவினர், எழிச்சூர் ஊராட்சியில் பிரதமரின் பழங்குடியினர் ஜன்மன் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளையும் பார்வையிட்டு, அங்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து பயனாளிகளிடம் கேட்டறிந்தனர்.

இந்த ஆய்வின் போது, தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

>>>>><<<<<

அறக்கட்டளை முறைகேடு வழக்கில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திரு.இம்ரான் காணுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இம்ரான்கான் பிரதமராக பதவி வகித்த காலத்தில், அவரும், அவரது மனைவியும் நடத்திவந்த அல்காதிர் அறக்கட்டளைக்கு முறைகேடாக நிலமும் இங்கிலாந்தைச் சேர்ந்த தனியார் நிறுவனத்திடமிருந்து, 190 மில்லியன் பவுண்டு பணமும் பெற்றதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில், இம்ரான் கானுக்கு பாகிஸ்தான் பணத்தில் பத்து லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இம்ரான்கான் மனைவி புஷ்ரா பீபிக்கு, 7 ஆண்டு சிறைத் தண்டனையும், 5 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு கருதி, இம்ரான்கான் அடைக்கப்பட்டுள்ள அடியாலா சிறைச்சாலையிலேயே, சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இலங்கையில் மக்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் விதமாக, மின்சாரக் கட்டணம் குறைக்கப்படுவதாக, அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் விதமாக, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு, வீட்டு உபயோகத்திற்கான மின்சாரக் கட்டணத்தில் 20 சதவீதம் குறைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்களுக்கு 21 சதவீத கட்டணக் குறைப்பும், ஹோட்டல்களுக்கு 31 சதவீதமும், தொழிற்சாலைகளுக்கு 30

சதவீதமும் கட்டணக் குறைப்பு செய்யப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

மஹாராஷ்ட்டிர மாநிலம், புனே – நாசிக் நெடுஞ்சாலையில் இன்று நேரிட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் பயணம் செய்த வேன், சாலையில் நின்று கொண்டிருந்த பேருந்து மீது மோதியதில் இந்த விபத்து நடந்தது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ், தலா 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

>>>>><<<<<

தில்லி சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – இங்கிலாந்தின் Naiktha Bains இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Riya Bhatia – Vaidehi Chaudhari இணையை வென்றது.

>>>>>END<<<<<